

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் செ. ராஜேஷ் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் ஊடகத் துறை தலைவர் எ. கோபண்ணா ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட நடிகர் விஜய குமார், அவரது மகன் அருண் விஜய் மற்றும் குடும்பத்தினர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட இயக்குனரும், நடிகருமான எஸ்.ஏ.சந்திரசேகர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் தலைவரும், திரைப்பட நடிகருமான வி. ராஜேஷ் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

### மறைந்த 168-வது வட்ட அவைத் தலைவர்

# பி.சென்னப்பன் இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - இரா.துரைராஜ் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, அக்.12 168வது வட்டக் கழக வட்ட அவைத் தலைவரு சைதை கிழக்குப் பகுதி மூத்த முன்னோடியும் மான பி.சென்னப்பன் அவர்கள் நேற்று 11.10.2024, வெள்ளிக் கிழமை, அதிகாலை 5.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் அவருடைய உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (12.10.2024, சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு மேல் எண், 41, கற்பகவினாயகர் கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல் என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு மாஞ்சோலை இடுகாட்டில் நல்லடக்கம்

செய்யப்படுகிறது.

இறுதி ஊர்வலத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர், மா.சுப்பிரமணியன், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. கலந்து கொண்டு ஊர்வலமாக செல்கின்றனர்.

எனவே நமது 168 மற்றும் 168அ வட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் மறைந்த சென்னப்பன் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துமாறு 168-வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், 168 'அ' வட்ட கழக செயலாளர் தா.மோகன் குமார் எம்.சி. ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.


கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பர்
திரு. முரசொலி செல்வம் அவர்களின்
மறைவால் வாடும் அவரின் குடும்பத்திற்கு
எனது ஆழ்ந்த இரங்கலை
தெரிவித்துக் கொள்கிறேன்
டாக்டர் கோ. விசுவநாதன்
நிறுவனர் மற்றும் வேந்தர்
வி ஐ டி பல்கலைக்கழகம்



கண்ணீர் அஞ்சலி



திராவிட இதழியலின் தீச்சுடர்
திராவிட இயக்கக் கொள்கைத் தூண்
திரு. முரசொலி செல்வம் அவர்களுக்கு
எங்களின் கண்ணீர் அஞ்சலி
ஆழ்ந்த இரங்கல்
PROF. DHANAPALAN COLLEGE OF SCIENCE & MANAGEMENT
AFFILIATED TO UNIVERSITY OF MADRAS
Thiru. Pugalendhi Dhanapalan
Chairman
Prof. Dhanapalan College of Science and Management
Chennai.